# குன்னூர் நகராட்சி

## 2018–2019ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

### அமைப்பும், மேலாட்சியும்

**ஸ்தாபிதம்**

குன்னூர் 01–11–1866ஆம் தேதி முதல் நகராட்சியாக ஸ்தாபிக்கப்பட்டது. இந்நகரம் கடல் மட்டத்திற்கு மேல் 1839 மீட்டர் (6050 அடி) உயரத்தில் அமையப்பெற்றுள்ளது.

**அமைப்பு–**

நகரத்தின் பரப்பளவு 15.05 சதுர கிலோ மீட்டர் ஆகும். அறிக்கையாண்டில் பரப்பளவில் மாறுதல் ஏதுவும் இல்லை. 2011ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி, மக்கள் தொகை 45,494 இதில் ஆண்கள் 22,107 மற்றும் பெண்கள் 23,387.

01–10–1961ம் தேதியன்று முதல் நிலை நகராட்சியாக அரசாணை எண்.61, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் 14–03–1961ன்படி நிலை உயர்த்தப்பட்டது.

அரசாணை எண்.85, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை நாள் 22–05–1998ன் படி தேர்வுநிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மன்றத் தலைவர் பதவிக் காலம் 25/10/2016ல் முடிவுற்ற பின் பேரில் அரசாணை எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24/10/2016இல் 26/10/2016 முதல் நகராட்சி ஆணையர்களே தனி அலுவலர் அந்தஸ்து வழங்கி ஆறு மாதங்களுக்கு தனி அலுவலர் பதவிக் காலம் அனுமதித்து ஆணையிடப்பட்டது. இதனை தொடர்ந்து மேலும் பதவிக் காலம் நீடித்து டாக்டர் ஜெ. ரகுநாதன், எம்.பி.பி.எஸ்., நகர் நல அலுவலர், ஆணையாளர் (பொ) ஆக 01/04/2018 முதல் 23/05/2018 வரையிலும், திருமதி. ஆர். சரஸ்வதி, பி.எஸ்சி, நகராட்சி ஆணையராக 24/05/2018 முதல் 19/12/2018 வரையிலும், மற்றும் திரு. வே. பாலமுருகன், பி.இ., நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) ஆக 20/12/2018 முதல் 31/03/2019 வரை தனி அலுவலராக பணிபுரிந்து வந்துள்ளார்கள். அதன் படி கீழ்க்கண்டவாறு தனி அலுவலர் காலத்தில் வட்டங்கள் நடத்தப்பட்டு அதற்கான தீர்மானங்களின் மீது முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.87 மற்றும் 88 நாள் 07–09–2006. தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் வெளியிட்ட அறிவிப்பு எண்.235 மற்றும் 236 நாள் 07–09–2006ன் படி உறுப்பினர்களின் பதவி சுழற்சி முறையில் மாற்றப்பட்டு வார்டுகள் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 17–10–2011ம் தேதியில் நடைபெற்ற சாதாரண உள்ளாட்சி மன்றத் தேர்தலிலும், வார்டு உறுப்பினர்களுக்கு மேற்கண்ட சுழற்சி முறை பின்பற்றப்பட்டது.

| வ. எண் | ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரம் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | நகர மன்றத் தலைவர் | தாழ்த்தப்பட்டவர்களுக்கு நேரடி தேர்தல் |
| 2. | தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | 4, 11, 22, 30. |
| 3. | தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | 2, 19, 29. |
| 4. | பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட வார்டுகள் (பொது) | 5, 12, 13, 15, 17, 26, 27. |
| 5. | பொதுவான வார்டுகள் | 01, 03, 06, 07, 08, 09, 10, 14, 16, 18, 20, 21, 23, 24, 25, 28. |

## 2) <u>நிர்வாக அதிகாரிகள்–</u>

அறிக்கை ஆண்டில் 01–04–2012 முதல் 31–03–2013ம் தேதி முடிய திரு. ஆ. சண்முகம், பி.இ., நகராட்சி பொறியாளர் அவர்கள் ஆணையர் பொறுப்பிலும் பதவி வகித்துள்ளனர்.

01–04–2012 முதல் 28.02.2013 முடிய திரு. பி. ஜெயராமன் மேலாளராகவும், 01–04–2011 முதல் அறிக்கை ஆண்டு முடிய திரு. ஜே. சுப்பிரமணி, கணக்கராகவும் பணியாற்றியுள்ளனர்.

## 3) <u>தேர்தல்கள் –</u>

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையரின் சுற்றறிக்கை எண்.9840/2010, தோ.பொ. 1 நாள் 02–09–2011ன் உத்திரவின்படி 17–10–2011ம் தேதியன்று குன்னூார் நகர மன்ற தேர்தல் நடத்தப்பட்டது.

குன்னூர் நகர மன்றத் தலைவர் பதவி ஆதி திராவிடர் (பொது ) ஆகும். மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 30 ஆகும். அதில் கீழ்க்காணும் விவரப்படி இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பெண்கள் | - 07 |
| தாழ்த்தப்பட்ட பெண்கள் | - 03 |
| தாழ்த்தப்பட்டோர் | - 04 |
| பொதுவானவை | - 16 |
| **மொத்தம்** | **- 30** |

தேர்தல் சம்பந்தமான வழக்குகள் எதுவும் நிலுவை இல்லை.

**தனி அலுவலரால் நடத்தப்பட்ட கூட்டங்கள் –**

1. அறிக்கை ஆண்டில் 17 கூட்டங்கள் நடத்தப்பட்டது. அவைகளில் சாதாரண கூட்டங்கள் 10, அவசரக் கூட்டங்கள் 07 நடை பெற்றது மற்றும் சிறப்பு கூட்டங்கள் ஏதும் நடைபெறவில்லை.

2. தனி அலுவலரின் முன் வைக்கப்பட்ட கூட்டங்களில் 270 பொருட்கள் மீதும் முடிவெடுக்கப்பட்டு தீர்மானங்கள் இயற்றப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள பொருட்கள் ஏதுமில்லை.

**5) நகரமன்ற குழுக்கள்**

| வ. எண் | குழுவின் பெயர் | நடைபெற்ற குழுக் கூட்ட எண்ணிக்கை | முடிவெடுக்கப்பட்ட பொருட்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நியமனக் குழு | 01 | 01 |
| 2. | ஒப்பந்தக் குழு | 0 | 0 |
| 3. | உள்ளூர் திட்ட அமைப்புக் குழு | 13 | 41 |
| 4. | வரி மற்றும் பரிசீலனைக்குழு | – | – |

**6) நிர்வாகம் –**

**பொது நிர்வாக பிரிவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிரந்தர பணியாளர்களின் பட்டியல் பின் வருமாறு :–**

| | | | |
|---|---|---|---|
| 1. | மேலாளர் | :– | 1 |
| 2. | உதவியாளர்கள் | :– | 2 |
| 3. | இளநிலை உதவியாளர்கள் | :– | 4 |
| 4. | தட்டச்சர்கள் | :– | 2 |
| 5. | பதிவுறு எழுத்தர் | :– | 2 |
| 6. | அலுவலக உதவியாளர்கள் | :– | 4 |
| 7. | ஈப்பு ஓட்டுநர் | :– | 1 |
| 8. | காவலர் | :– | 2 |

**கணக்குப் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | கணக்கர் | :– | 1 |
| 2. | உதவியாளர் | :– | 1 |
| 3. | இளநிலை உதவியாளர் | :– | 2 |
| 4. | பணப்பொறுப்பாளர் | :– | 1 |

**வருவாய் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | வருவாய் அலுவலர் | :– | 1 |
| 2. | வருவாய் ஆய்வாளர்கள் | :- | 2 |
| 3. | சந்தை கண்காணிப்பாளர் | :- | 1 |
| 4. | சந்தை மேற்பார்வையாளர் | :- | 1 |
| 5. | உதவியாளர் | :- | 1 |
| 6. | இளநிலை உதவியாளர்கள் | :- | 2 |
| 7. | வருவாய் உதவியாளர்கள் | :- | 10 |
| 8. | அலுவலக உதவியாளர் | :- | 1 |

அலுவலகப் பணியாளர்களுக்கு ஊதியமளிக்க அறிக்கையாண்டில் செலவிடப்பட்டுள்ள மொத்த தொகை ரூ. லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு நகர வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு **24–01–1981**ம் தேதிய அரசு வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் **1850**ம் எண் கொண்ட அரசாணையின்படி நடப்பாண்டில் நன்கொடையாக ரூ.**90,000**/= அறிக்கை ஆண்டில் செலுத்தப்பட்டது.

**2.** அரசினால் பிறப்பிக்கப்பட்டு தற்போது அமுலில் இருந்து வருகின்ற அரசாணைகளின்படி, நகராட்சி அலுவலர் மற்றும் ஊழியர்கள்பற்றிய நியமனம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள்இவைகள் குறித்த விதிகள்பின்பற்றப்பட்டது. நடப்பு ஆண்டில் பணியாளர்களுக்கு தண்டனைகள் ஏதும் வழங்கப்படவில்லை.

**3.** நகராட்சி அலுவலகம் தனது சொந்த கட்டிடத்திலேயே தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் அலுவலக கட்டிடங்கள்பராமரிப்பதற்காக செலவீனம் இல்லை.

**<u>வழக்குகள்</u>**

இந்நகராட்சியில் வழக்குகளை நடத்த திரு. கி. ராஜ்குமார், வழக்கறிஞர் ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் மெதாத்த நிலுவை வழக்குகள் 52 ஆகும். இதில் 8 முடிவுற்ற வழக்குகள் ஆகும். ஆண்டு முடிவில் வழக்குகள் 44 எண்ணிக்கைகள் நிலுவையில் உள்ளது.

**<u>வழக்குகள் விவரம்</u>**

| விவரம் | நகரமைப்பு பிரிவு | பொறியியல் பிரிவு | வருவாய் பிரிவு | பொது நல பிரிவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017இல் நிலுவை எண்ணிக்கை | 13 | 5 | 7 | 3 | 28 |
| 2018இல் வரப்பெற்ற வழக்குகள் | 1 | - | 19 | 4 | 24 |
| மொத்தம் | 14 | 5 | 26 | 7 | 52 |
| முடிவுற்றவை | 2 | - | 4 | 2 | 8 |
| **மொத்த நிலுவை** | **12** | **5** | **22** | **5** | **44** |

**<u>தமிழ்நாடு புரட்சித் தலைவர் சத்துணவு திட்டம்</u>**

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் 5 + 9 மற்றும் 10 + 14 வரை வயதுள்ள குழந்தைகளுக்கு, இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் 6 நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் சத்துணவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு இவர்களுக்கு 01–01–2019 முதல் ரூ.12200-2500-5000 +G.P.500 என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் மற்றும் அகவிலைப்படி வழங்கப்பட்டு வருகிறது.

**சத்துணவு மைங்களில் மாணவ – மாணவியர்களுக்கு கீழ்க்காணும் விகிதப்படி உணவு வழங்கப்படுகிறது**

| | | | |
|---|---|---|---|
| **1.** | அரிசி | – | 1 முதல் 5ம் வகுப்பு வரை 100 கிராம்<br>6 முதல் 8ம் வகுப்பு வரை 150 கிராம் |
| **2.** | பருப்பு | – | 15 கிராம் |
| **3.** | உப்பு | – | 1.9 கிராம் |
| **4.** | எண்ணெய் | – | 3 கிராம் |
| **5.** | காய்கறிகள் | – | 20 பைசா வீதம் |
| **6.** | முட்டை | – | வாரம் ஐந்து முட்டைகள்<br>திங்கள், செவ்வாய், புதன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படுகிறது. |
| **7.** | உருளைக் கிழங்கு | – | 0.40 பைசா |

| | | | |
|---|---|---|---|
| **8.** | பயிறு | – | 20 கிராம் |

இத்திட்டத்திற்காக உணவுப் பொருட்கள் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கூட்டுறவு கழகத்தால் பிரதி மாதமும் விநியோகம் செய்யப்பட்டது. அறிக்கையாண்டில் இக்கணக்கின்கீழ் ரூ.1,00,239/– பணியாளர்கள் மற்றும் உணவூட்டு செலவினத்திற்கு சேர்த்து மான்யமாக பெறப்பட்டு முழுத் தொகையும் செலவழிக்கப்பட்டது.

அறிக்கையாண்டில் புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டமானது சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**7) <u>பொறியியல் பிரிவு பணிகள்</u>**

அறிக்கை ஆண்டில் **01/04/2018** முதல் **14/05/2018** வரை திரு. கே. மகேந்திரன்அவர்களும், **14/05/2018** முதல் **01/07/2018** வரை திரு. ம.ல. சிவராமன் உதவி பொறியாளர் அவர்களும், **05/07/2018** முதல் **04/10/2018** வரை திரு. சி. ரவி, செயற்பொறியாளர், உதகை அவர்களும். மற்றும் **05/10/2018** முதல் **31/03/2019** வரை திரு.வே. பாலமுருகன், நகராட்சி பொறியாளர்களாக பணியாற்றியுள்ளார்கள்.

**அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | நகராட்சி பொறியாளர் | : | 1 |
| 2. | உதவி பொறியாளர் | : | 2 |
| 3. | வரைவாளர் | : | 1 |
| 4. | பணி ஆய்வர் | : | 3 |
| 5. | லாரி ஓட்டுநர்கள் | : | 3 |
| 6. | உதவியாளர்கள் | : | 1 |
| 7. | இளநிலை உதவியாளர்கள் | : | 2 |
| 8. | சாலை உருளை ஓட்டுநர் | : | – |
| 9. | ஈப்பு ஓட்டுநர் | : | 1 |
| 10 | தோட்டகாரர்கள் | : | 5 |
| 11 | மின் கம்பியாளர் | : | 3 |
| 12 | மின் கம்பி உதவியாளர்கள் | : | 3 |
| 13 | ரேலியா காவலர் | : | 1 |
| 14 | கேங் மஸ்தூர் | : | 6 |
| | **மொத்தம்** | : | **31** |

பொது சுகாதாரம் மற்றும் நகரமைப்பு ஆகிய தலைப்பின் கீழ் வராத இதர வேலைகளான குடிநீர் வழங்கல், கழிவு நீர் கால்வாய் அமைத்தல், பூங்கா, தோட்டங்கள்பராமரிப்பு, கட்டிடங்கள்கட்டுதல், சாலைகள்அமைத்தல் மற்றும் பராமரித்தல் போன்ற வேலைகளை பொறியர் பிரிவு செய்து வருகிறது.

அறிக்கையாண்டில் பொது மராமத்து பணிகளுக்கு மொத்தம் ரூ. இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. (சென்ற ஆண்டில் ரூ.26.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது)

**8 சாலைகள், பாலங்கள்மற்றும் கட்டிடங்கள்**

குன்னூர் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகள்பின்வருமாறு :–

| | | |
|---|---|---|
| 1. | சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை | – 16.750 கி.மீ. |
| 2. | தார் சாலைகள் | – 50.275 கி.மீ. |
| 3. | பேவர் பிளாக் | - 2.230 கி.மீ. |
| | **மொத்தம்** | **– 69.255 கி.மீ.** |

**நகராட்சி கட்டிடங்கள்–**

இந்நகராட்சியில் அலுவலகக் கட்டிடம், துவக்கப்பள்ளி, கட்டிடங்கள், பயணீயர் விடுதி, தாய் – சேய் நல விடுதி, சந்தைக் கட்டிடங்கள், பேருந்து நிலையக் கட்டிடங்கள், பணியாளர் குடியிருப்புகள் ஆகியவை நகராட்சிக்கு சொந்தமாக உள்ளது.

**10. வாகனங்கள்**

கீழ்க்கண்ட வாகனங்கள்இந்நகராட்சியால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | டி.என்.43–பி/3925 | – | ஈப்பு வாகனம் |
| 2. | டி.என்.43/4022 | – | மினி டிப்பர் லாரி |
| 3. | டி.என்.43/4024 | – | மினி டிப்பர் லாரி |
| 4. | டி.என்.43/4187 | – | அசோக் லைலாண்டு லாரி |
| 5. | டி.என்.43ஏ/2212 | – | சுவராஜ் மஸ்தா மினி லாரி |
| 6. | டி.என்.43/8945 | – | ஈப்பு வாகனம் |
| 7. | டி.என்.43ஏ/1660 | – | எக்ஸ்கவேட்டர் 3டி லோடர் இயந்திரவாகனம் |
| 8. | டி.என்.43பி/9689 | – | ஈப்பு வாகனம் |
| 9. | டிஎன்43பி/4520 | – | டாடா சுமோ ஆம்புலன்ஸ் |
| 10. | டிஎன்43/எச்8255 | – | ஆட்டோ வாகனம் |

| | | | |
|---|---|---|---|
| 11. | டிஎன்43/எச்8215 | – | ஆட்டோ வாகனம் |
| 12. | டிஎன்43/எச்8228 | – | ஆட்டோ வாகனம் |
| 13. | டிஎன்43/எச்8259 | – | ஆட்டோ வாகனம் |
| 14. | டிஎன்43/எச்8241 | – | ஆட்டோ வாகனம் |
| 15. | டிஎன்43/கே249 | – | ஆட்டோ வாகனம் |
| 16. | டிஎன்43/கே292 | – | ஆட்டோ வாகனம் |
| 17. | டிஎன்43/கே297 | – | ஆட்டோ வாகனம் |

இவை தவிர குடிநீர் விநியோக பணிக்கு கீழ்க்கண்ட வாகனங்கள்பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | டி.என்.43எ/0165 | – | குடிநீர் மினி டாடா லாரி 5000 லிட்டர் கொள்ளளவு |
| 2. | டிஎன்.43சி/3268 | – | குடிநீர் டேங்கர் லாரி, அசோக் லைலேண்ட் காமட் 5000 லிட்டர் கொள்ளளவு |

இவ்வாகனங்களில் மிகப் பழமையானதாக உள்ளதை மட்டும் கழிவு செய்வதற்கு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>**திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்**</u>

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்காக கீழ்க்கண்ட வாகனங்கள்பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | டி.என்.43பி–4527 | டிப்பர் லாரி |

| | | | |
|---|---|---|---|
| 1. | டிஎன்43/எச்8215 | – | ஆட்டோ வாகனம் |
| 2. | டிஎன்43/எச்8228 | – | ஆட்டோ வாகனம் |
| 3. | டிஎன்43/எச்8259 | – | ஆட்டோ வாகனம் |
| 4. | டிஎன்43/எச்8241 | – | ஆட்டோ வாகனம் |
| 5. | டிஎன்43/எச்8255 | – | ஆட்டோ வாகனம் |
| 6. | டிஎன்43/கே249 | – | ஆட்டோ வாகனம் |
| 7. | டிஎன்43/கே292 | – | ஆட்டோ வாகனம் |
| 8. | டிஎன்43/கே297 | – | ஆட்டோ வாகனம் |

## 11. <u>விளக்கு வசதிகள்</u>–

அறிக்கை ஆண்டில் தெருவிளக்குகளின் எண்ணிக்கை 2626 ஆகும்.

| | | |
|---|---|---|
| 15 வாட்ஸ் குழல் விளக்குகள்(டியூப் ரைட்டுகள்) | – | 1721 |
| 220 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | – | 644 |
| 130 வாட்ஸ் சோடியம் வேப்பர் விளக்குகள் | – | 145 |
| 400 வாட்ஸ் உயர் மின் கோபுர விளக்குகள் | – | 137 |
| 100 வாட்ஸ் உயர் மின் கோபுர விளக்குகள் | – | 31 |
| **மொத்தம்** | – | **2678** |

**தெருவிளக்குகள்பராமரிப்பு ஊழியர்கள்**

| | | |
|---|---|---|
| மின் கம்பியாளர் | – | 1 |
| மின் கம்பி உதவியாளர் | – | 1 |
| **மொத்தம்** | – | **2** |

இவ்வாண்டு தெரு விளக்குகளுக்கு மின் கட்டணம் மற்றும் உதிரி பாகங்களுக்காக ரூ.28.00 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. எல்லா நாட்களிலும் மாலை 6.30 மணி முதல் காலை 6.00 மணி வரை விளக்குகள் எரிய வைக்கப்பட்டுள்ளது. தெருவிளக்குகள் யாவும் நகராட்சியால் முறையாகப் பராமாக்கப்பட்டு வருகிறது. விளக்கு வரியாக 2.6 சதவிகிதம் வசூலிக்கப்படுகிறது. 1 கிலோ மீட்டருக்கு சராசரியாக 35 மின் விளக்குகள் வீதம் உள்ளது. அறிக்கையாண்டில் இந்நகராட்சியின் மூலம் பராமரிக்கப்பட்டு வந்த தெரு விளக்குகள் ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மென்ட்ஸ் நிறுவனத்திற்கு பத்து ஆண்டுகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான பராமரிப்பு மாத செலவினம் ரூ.1,46,591/- மற்றும் பொருட்கள் விநியோகம் செய்வதற்கு செலவீனம் நகராட்சியின் மூலம் வழங்கப்படுகிறது.

## 12. குடிநீர் விநியோகம்–

**குடிநீர் வழங்கல் பிரிவு ஊழியர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | இளநிலை பொறியாளர் | : | 1 |
| 2. | தண்ணீர் விநியோக மேற்பார்வையாளர் | : | 1 |
| 3. | அளவு மானியர் | : | 2 |
| 4. | குழாய் பொருத்துநர் (நிலை–1) | : | 1 |
| 5. | குழாய் பொருத்துநர் (நிலை–2) | : | 2 |
| 6. | குழாய் திருப்புநர்கள் | : | 3 |
| 7. | சேனல் பியுன் | : | 1 |
| 8. | தண்ணீர் விநியோக காவலர் | : | 6 |
| 9 | பொது குழாய் துலக்குநர் | : | 2 |
| 10 | டாங்கர் லாரி ஓட்டுநர் | : | 2 |
| 11 | குடிநீர் விநியோக உதவியாளர்கள் | : | 3 |
| 12. | லாரி துலக்குநர் | : | 1 |
| | **மொத்தம்** | | **24** |

நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது இதன் விவரங்கள் பின்வருமாறு:–

| **முக்கிய நீர் ஆதாரங்கள்** | **கொள்ளளவு** | **அதிகபட்ச தண்ணீர் மட்டம்** |
|---|---|---|
| ரேலியா நீர்தேக்கம் | 3000 லட்சம் காலன் | 43’.6” |
| பந்துமி நீர்தேக்கம் | 15 லட்சம் காலன் | 09’.8” |

இவைகளிரண்டும் முறையே நகரிலிருந்து 14 கிலோ மீட்டர் மற்றும் 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்நீர்த்தேக்கங்களிலிருந்து கிரேஸ் ஹில்லில் உள்ள சேமிப்புத் தொட்டிக்கும், மவுண்ட் பிளசன்டில் உள்ள சேமிப்புத் தொட்டிக்கும் கொண்டு வரப்பட்டு, நகரில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இரண்டு முக்கியமான நீர் தேக்கங்களைத் தவிர கீழ்க்கண்ட நீர் ஆதாரங்களும் நகரின் குடிநீர் விநியோகப் பயன்பாட்டில் உள்ளன.

1. கரடிப்பள்ளம்
2. வண்டிச்சோலை
3. ஜிம்கானா
4. ஓல்ட் பாரஸ்ட் ஓடை
5. நரியாணி ஓடை
6. அட்டடி
7. பித்தாபுரம்
8. இங்கில்டன்
9. காட்டேரி
10. காந்திபுரம்
11. ரெய்லிகாம்பவுண்ட்
12. புரூக்லேண்ட்ஸ்
13. கரன்ஸி.

இவைகள் நகரில் உள்ள மேட்டுப்பாங்கான இடங்களுக்கு குடிநீர் வழங்கிடப் பயன்படுத்தப்படுகிறது. ஜிம்கானா ஓடையிலிருந்து 50 எச்.பி. மின் பம்பு மூலமாக சிம்ஸ்பார்க் பூங்கா 2 எண் 20 எச்.பி. பம்பு மூலமும் தினமும் 10 இலட்சம் லிட்டர் தண்ணீர் கிரேஸ்ஹில் தொட்டிக்கு ஏற்றப்படுகிறது. மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், உதகை அவர்கள்மூலமாக 5 கிமீ தூரத்தில் உள்ள பெல்லட்டி மட்டத்தில் ஓடையிலிருந்து தண்ணீர் ஒல்டு பாரஸ்ட் மெயின் குழாயின் மூலம் இணைத்து கிரேஸ்ஹில் தொட்டிக்கு ஏற்றப்பட்டுள்ளது. தற்போது கரன்சி நீர்தேக்கத்திலிருந்து 20 எச்.பி பம்ப் மூலமாக புருக்லேண்ட்ஸ் தொட்டிக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அங்கிருந்து 25 எச்.பி பம்ப் மூலமாக தினமும் 4 லட்சத்து 30 ஆயிரம் லிட்டர் தண்ணீர் கிரேஸ்உறில் தொட்டிக்கு ஏற்றப்பட்டு நகருக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

தற்போது நகரில் உள்ள பிரதான குழாயின் மொத்த நீளம் 67.074 கி.மீ. அறிக்கையாண்டில் தினசரி விநியோகிக்கப்பட்ட குடிநீர் அளவு 45.20 இலட்சம் லீட்டர். இந்த கணக்கெடுப்பின்படி ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு விநியோகிக்கப்படும் தண்ணீர் அளவு 90.00 லிட்டர் ஆகும். சென்ற ஆண்டு நபர் ஒன்றுக்கு 90.00 லிட்டர் தண்ணீர் கொடுக்கப்பட்டது. குடிநீர் திட்டத்திற்காக பெறப்பட்ட அரசு கடன் தொகை ரூ.79.14 லட்சம் ஆகும். இந்நாள்வரை உள்ள மொத்த குடிநீர் குழாய் இணைப்புகள் 6128 அனைத்தும் மீட்டர் முறையில் உள்ளது.

நகரில் உள்ள பொதுக் குடிநீர்க் குழாயின் எண்ணிக்கை 221 வீட்டு உபயோகத்திற்காக கொடுக்கப்பட்ட இணைப்புகள் 6800 வீட்டு உபயோகமில்லாத இணைப்பு 391 ஆகும். தண்ணீர் விநியோகத்திற்காக கட்டணமாக பெறப்பட்ட வருவாய் ரூ.98.00 லட்சம் ஆகும். தற்பொழுது வசூலிக்கப்படும் தண்ணீர் கட்டணம் பின்வருமாறு:-

1000 லிட்டருக்கும் அதன் பகுதிக்கும் (குடியிருப்பு உபயோகத்திற்கு) – ரூ. 7.00
குடியிருப்பு அல்லாத வகைக்கு – ரூ. 25.00
1000 லிட்டருக்கு அதன் பகுதிக்கும் (தொழிற்சாலைகளுக்கும்) – ரூ. 20.00

**பணிகள்**

அறிக்கை ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் பிற்சேர்க்கையில் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

## 14. மருத்துவ வசதிகள்

நகரில் மவுண்ட் ரோட்டில் லாலி மருத்துவமனை என்ற அரசு மருத்துவமனை செயல்படுகிறது. நகராட்சியால் மருந்தகங்கள்ஏதும் பராமாக்கப்படுவதில்லை.

## 15. பொது சுகாதாரம்

### அ. அமைப்பும், பணியாளர்களும்

இந்நகராட்சியில் நகர் நல அலுவலராக 01/01/2016 முதல் 31/03/2019 வரை டாக்டர். ஜெ. ரகுநாதன் அவர்கள் பதவி வகித்து வருகிறார்.

பெண் மருத்துவ அலுவலர் பணியிடம் 01–10–2006 முதல் பணியிடம் காலியாக உள்ளது. சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மகப்பேறு பணியாளர்கள் விவரம்.

| வ. எண் | பணியாளர்கள்விவரம் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | |
|---|---|---|---|
| 1. | நகர்நல அலுவலர் | 1 | காலி பணியிடம் |
| 2. | மருத்துவ அலுவலர் | 1 | காலி பணியிடம் |
| 3. | உதவியாளர் | 1 | காலி பணியிடம் |
| 4. | இளநிலை உதவியாளர் | 1 | – |
| 5. | துப்புரவு ஆய்வாளர் | 4 | காலி பணியிடம் – 1 |
| 6. | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 8 | காலி பணியிடம் - 2 |

| | | | |
|---|---|---|---|
| 7. | சுகாதாரப் பார்வையாளர் | 1 | காலி பணியிடம் – 1 |
| 8. | மகப்பேறு ஆயாக்கள் | 10 | காலி பணியிடம் – 7 |
| 9. | மகப்பேறு உதவியாளர்கள் | 9 | காலி பணியிடம் – 9 |
| 10. | பெண்துப்புரவு பணியாளர்கள்(மகப்பேறு நிலையங்கள்) | 5 | காலி பணியிடம் – 2 |
| 11. | ஓட்டுநர்கள் | 6 | காலி பணியிடம் – 1 |
| 12. | துப்புரவு பணியாளர்கள் | 163 | காலி பணியிடம் – 82 |

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள விகிதங்களின் படி எல்லா பணியாளர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்பட்டது.

2. இவ்வாண்டில் சுகாதாரப் பிரிவு அலுவலர்களால் கீழ்க்கண்ட பொருள் பற்றி சுகாதார விழாக்கள்கொண்டாடப்பட்டது.

1) நீலகிரியை அழகுப்படுத்தும் திட்டம்.
2) திடக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு ஊர்வலம்.
3) தூய்மை வாரம்.
4) பிளாஸ்டிக் ஒழிப்பு.
5) உலக சுற்றுலா தினவிழா.
6) உள்ளாட்சி தினவிழாவினை முன்னிட்டு கூட்டு துப்புரவுப் பணி.
7) பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு பயிற்சிமுகாம்.

## ஆ) <u>பிறப்பு விகிதமும், மகப்பேறு உதவியும்</u>

அறிக்கையாண்டில் (2018) 270 பிறப்புகள் மற்றும் 338 இறப்புகள் பதிவாக்கப்பட்டது. சென்ற 2018 ஆண்டு அறிக்கையாண்டில் 124 இறப்பு பதிவாக்கப்பட்டது.

இந்நகராட்சியில் மொத்தம் தகுதிப் பெற்ற 2 பேறு கால உதவியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது.

குன்னூர் நகராட்சி எல்லைப் பகுதியிலிருந்து 2018/19ம் ஆண்டு 159 பிரசவங்கள் அரசு மருத்துவமனையிலும், 152 பிரசவங்கள் தனியார் மருத்துவமனையிலும் பார்க்கப்பட்டது. 01 பிரசவம் வீட்டிலும் பார்க்கப்பட்டது. மொத்த பிரசவங்கள் 312 ஆகும்.

அறிக்கையாண்டில் 99.3% சதவிகித பிறப்புகள் தகுதி பெற்ற நபர்களால் கவனிக்கப்பட்டது.

அறிக்கையாண்டில் குழந்தைகளின் பிறப்பு ஆயிரம் மக்கட் தொகைக்கு 6.5 என்ற விகிதத்தில் உள்ளது. குழந்தைகளின் மொத்த இறப்பு 8.6/1000 ஆக உள்ளது.

**<u>தாய் – சேய் நலம் 2017–2018</u>**

அறிக்கையாண்டில் நகராட்சியால் தாய் – சேய் நல விடுதிகள்தொடர்ந்து பராமரிக்கப்பட்டது. தாய் – சேய் நல விடுகளில் கீழ்க்கண்டவாறு படுக்கை வசதி செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | பிரதான தாய் – சேய் நல விடுதி | 1 படுக்கை |
| 2. | ஆழ்வார்பேட்டை தாய் – சேய் நல விடுதி | 1 படுக்கை |
| 3. | ஒட்டுப்பட்டரை தாய் – சேய் நல விடுதி | 1 படுக்கை |
| 4. | காந்திபுரம் தாய் – சேய் நல விடுதி | படுக்கையில்லை |
| 5. | மிஷன் ஹில் தாய் – சேய் நல விடுதி | 1 படுக்கை |
| 6. | வண்டிசோலை தாய் – சேய் நல விடுதி | மூடப்பட்டுள்ளது. |

பேறு கால உதவியாளர்களும், சுகாதார பார்வையாளர் ஆகியோர் வீடுகள்தோறும் சென்று கணக்கெடுப்பு செய்து 371 கர்ப்பிணிகளை பதிவு செய்துள்ளனர். பின்னர் குழந்தைகளையும், பள்ளி செல்லும் பருவமடையாத குழந்தைகளை பார்வையிட்டு வந்தனர். அறிக்கையாண்டில் பேறுகால உதவியாளர்களின் மருத்துவ ஆலாசனையை ஏற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர் எண்ணிக்கை 51 லூப் முறையை ஏற்றுக் கொண்டு லூப் பொருத்தி கொண்டவர்கள் எண்ணிக்கை 32 ஆகும்.

சுகாதாரப் பார்வையாளர்களும், பள்ளி நல மருத்துவரும் சேர்ந்து நகராட்சிப் பள்ளிகளுக்கும் மற்றும் இதர தனியார் பள்ளிகளுக்கும் சென்று தடுப்பு ஊசி போட்டனர் மற்றும் சுகதாரக் கல்வி கற்றுக்கொடுக்கப்பட்டது. அனைத்து தாய் – சேய் நல விடுதிகளிலும் கீழ்க்கண்டவாறு பரிசோதனைகள் செய்யப்பட்டன.

| | |
|---|---|
| கர்ப்பிணிகள்சோதனைக்கான கிளினிக் நடந்த நாட்கள் | 48x4 192 |
| குடும்ப நல கல்விக்குரிய கிளினிக் நடந்த நாட்கள் | 192 |
| ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தை கிளினிக் நடந்த நாட்கள் | 192 |
| கிளினிக்குகளுக்கு வந்த மொத்த கர்ப்பிணிகள் | **371** |

இவை தவிர மாதம் ஒருமுறை அனைத்து முதலமைச்சர் சத்துணவு மையங்களையும் பார்வையிட்டு அனைத்து குழந்தைகளுக்கும் ரத்த சோகையை தடுக்க மூன்று முறையும் எப்.எஸ்.டி. மாத்திரைகளும், கண் நோய் தடுக்க வைட்டமின் மருந்து இரண்டு முறையும் கொடுக்கப்பட்டது. குழந்தைகள்எடை, உயரம் பற்றி இரண்டு முறை கணக்கு எடுக்கப்பட்டது. தாய்மார்களுக்கு சுகாதாரத்தைப் பற்றியும், குடும்ப நல தடுப்பு முறைப் பற்றியும் மற்றும் சத்துணவு பற்றியும் விளக்கங்கள்அளிக்கப்பட்டது.

<u>**போலியோ நோய் தடுப்பு மருந்து வழங்கும் திட்டம்**</u>

போலியோ நோய் ஒழிப்புத் திட்டம் தேசீய அளவில் திட்டமிடப்பட்டவாறு **28/04/2019**ம் தேதியில் குன்னூர் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டது.

மகப்பேறு ஆயாக்கள் மற்றும் உதவியாளர்கள் மூலம் குழந்தைகள் கணக்கெடுக்கப்பட்டு குன்னூர் நகரில் **28** முகாம்கள் அமைக்கப்பட்டு **28/04/20219**ல் **2251** குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

<u>**பிறப்பு – இறப்பு விகிதம்**</u>

இந்நகராட்சி மொத்தம் தகுதிப் பெற்ற **2** பேறுகால உதவியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது. பேறு காலப் பணிக்கு தேவையான உபகரணங்கள் உள்ளன. குன்னூர் நகராட்சி பகுதியில் **159** பிரசவங்கள், அரசு மருத்துவ மனையிலும் **152** பிரசவங்கள், தனியார் மருத்துவமனையிலும் மற்றும் மகப்பேறு மையத்திலும் **1** பிரசவம் வீட்டிலும் பார்க்கப்பட்டுள்ளது.

**99.3**% சதவீத பிறப்புகள் தகுதிப் பெற்ற நபர்களால் கவனிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் ஐ.எம்.ஆர்.**0/1000** விகிதத்திலும் குழந்தைகள் மொத்த பிறப்பு **6.5/1000** விகிதமாக ஆக உள்ளது. தாய்மார்கள் **1** MMR இல்லை. அதன் இறப்பு விகிதம் ஆயிரம் பிறப்புக்கு 1 MMR என்று அமைந்துள்ளது.

அறிக்கையாண்டில் **2018–2019** லேபர் கேஸ்கள் எதுவும் நடைபெறவில்லை. குடும்பநல அறுவை சிகிச்சைக்கு மகப்பேறு உதவியாளர்கள் ஊக்குவிப்பு செய்து **51** தகுதி வாய்ந்த தம்பதியினர்களுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தற்காலிக கருத்தடை முறையில் **32** தாய்மார்களுக்கு காப்பர் டி பொருத்தப்பட்டுள்ளது.

## **2017–2018**

| வ. எண் | 2017–2018 | 1–வது | 2–வது | 3–வது | பூஸ்டர் |
|---|---|---|---|---|---|
| 1. | பெண்டர் போள் | 289 | 277 | 271 | - |
| 2. | போலியோ | 288 | 276 | 273 | 21 |
| 3. | டி.பி.டி. (5.64) | –– | –– | –– | 174 |
| 4. | தட்டம்மை (மீசல்ஸ்) | 254 | –– | –– | –– |
| 5. | பி.சி.ஜி. | 296 | –– | –– | –– |
| 6. | டி.டி. ஸ்கூல் 10 | –– | –– | –– | 196 |
| 7. | டி.டி. ஸ்கூல் 16 புள் | –– | –– | –– | 214 |
| 8. | எப்.எஸ்.டி (முதியோர்) | 338 | 334 | 337 | – |
| 9. | எப்.எஸ்.டி. (குழந்தைகள்) | 14 | 15 | –– | – |
| 10. | டி.டி.கர்ப்பினி தாய்மார்களுக்கு இரண ஜன்னி தடுப்பூசி | 302 | 302 | – | 69 |
| 11. | வைட்டமின் ஏ | 1997 | 1994 | –– | –– |
| 12. | எப்.எஸ்.டி. சிரப் | 74 | –– | –– | –– |
| 13. | H. Hepatitis B | 296 | –– | –– | –– |

அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள விகிதங்களின்படி எல்லா பணியாளர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்பட்டது.

**<u>இறப்பு</u>**

பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவு செய்ய தகுதிப்பெற்ற **2** துப்புரவு ஆய்வாளர்கள் உள்ளனர். நகரம் **4** பிரிவாக பிரிக்கப்பட்டு, இவ்வாண்டு பதிவு செய்யப்படாத பிறப்புகள் மற்றும் இறப்புகள்ஏதுமில்லை. அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள இறப்புகள் **338** கடந்த வருடம் **329** ஆகும்.

**<u>பல்வேறு நோய் மூலம் ஏற்பட்ட இறப்பு விகிதம்</u>**

| | | |
|---|---|---|
| வயிற்றுக் கடுப்பும், கழிச்சலும், குடற்புண் காய்ச்சல் | – | 15% |
| மற்ற சுவாச சம்பந்தமான நோய் | – | 20% |
| பேறுகால இழப்புகள் | – | 0% |
| மற்றும் எல்லா காரணங்களாலும் | – | 18% |

1. ஒரு வருடத்திற்கு குறைவான வயதுடைய குழந்தைகள் இறப்புகள் 2018ல் 3 ஆக இருந்தது. சென்ற ஆண்டு 2018/19ல் இது 9 ஆக இருந்தது.
2. அறிக்கையாண்டில் நகரத்தில் காலரா நோய் ஒன்றும் இல்லை.
3. பெரியம்மை நோய் இந்நகராத்தில் இல்லை. இறப்பும் இல்லை.
4. இந்நகரம் மூளை காய்ச்சல் நோயினின்றும், யானைக்கால் நோயினின்றும் விடுபட்டு இருந்தது.
5. கொக்கிப்புழு நோயின் பொருட்டு இறப்புகள் எதுவுமில்லை.

**<u>துணைச் சட்டங்களும் செயல்படும் முறைகளும் (சுகாதாரப் பிரிவு)</u>**

1. தோல் சேகரித்தலும், அவைகளில் ஈடுபடுதலும்.
2. கற்பூரம் தைலம் முதலியன காய்ச்சுதல்.
3. தானியங்கள், வெல்லங்கள்.
4. பால் விற்பனை.
5. பால் பண்ணைகளும், மாட்டுக் கொட்டகைகளும்.
6. காற்று ஏற்று (சோடா வகை) நீர்பாசங்கள்தயாரிப்பு.
7. உணவு விடுதிகளும், தங்கும் விடுதிகளும்.
8. சந்தை – பொதுவாகனமும் தனியாருடையது.
9. கால்நடை வெட்டுமிடங்கள்– பொதுவானதும், தனியாருடையதும்.
10. திண்பண்டங்கள்தயாரித்தல்.
11. திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள்.

மேற்கண்ட அபாயகரமானதும், அருவருக்கத் தக்கதுமான தொழில்களுக்கு, லைசன்ஸ் வழங்கி சுகாதாரப் பணியாளர்களால் மேற்குறிப்பிட்டுள்ள துணைச் சட்டங்கள் பின் பற்றப்பட்டுள்ளது.

## 6. <u>துப்புரவு</u>

தனியார் வீடுகளில் கழிவறைகளில் கழிவுகள் அகற்றுவது நகராட்சியால் நிறுத்தப்பட்டு விட்டது. நகரில் உள்ள வீடுகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனி நபர் குறைந்த செலவிலான கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. நகரில் மொத்தம் 34 பொதுக்கழிப்பிடங்களும், 2 சிறுநீர் கழிப்பிடங்களும் உள்ளன. 8 ஆட்டோ வாகனங்களில் குப்பைகளை வீட்டிலேயே பிரிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

குப்பைகள் 8 ஆட்டோக்கள் மற்றும் 1 லாரி லாரிகள் மூலமாக நகரிலிருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள 12.35 ஏக்கர் பரப்பளவு கொண்டு உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு கொட்டப்படுகிறது.

உரக் கிடங்கில் சேகரமாகும் குப்பைகளை IWMUST என்ற நிறுவனத்தினருக்கு 20 ஆண்டுகள் உரம் தயாரிக்க குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் குப்பைகளை தரம் பிரித்து உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தயாரிக்கும் உரத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.400/= வீதம் நகராட்சிக்கு செலுத்தி வருகின்றனர். 2018–2019ம் ஆண்டிற்கு 344.100 டன் உரம் தயாரிக்கப்பட்டு அதற்கான தொகை ரூ.2,04,071/= நகராட்சிக்கு பெறப்பட்டுள்ளது.

இதுத் தவிர நீலகிரி மாவட்டத்தில் உருவாகும் மருத்துவக் கழிவுகளை அழிக்க இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் 50 சென்ட் நிலம் இந்திய மருத்துவ கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**<u>நவீன கழிப்பிட வசதிகள்</u>**

இத்திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லையில் உள்ள வீடுகளில் 177 குறைந்த செலவிலான கழிப்பிடங்கள்IHSDP மூலம் கட்டித் தரப்பட்டுள்ளது.

**<u>திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்</u>**

உச்சநீதி மன்ற உத்திரவுகளின் படியும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதி 2000ன் படியும் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.159, நாள் 21–12–2001ன் படியும் இந்நகராட்சியில் எல்லா வார்டுகளிலும் வீடு வீடாக சென்று மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் தனித்தனியாக பிரித்து வாங்கப்பட்டு உரக்குழிக்கு எடுத்து செல்லப்படுகிறது.

மேலும், வார்டு எண்கள்1, 5, 6, 7, 15,16, 17, 18, 19, 21, 23, 29 மற்றும் வார்டு எண்.3ல் ஒரு பகுதி ஆகியன 23–09–2008 முதல் தனியார்மயமாக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டம் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>அச்ச மற்றும் அருவருக்கத் தக்க தொழில்கள் உரிமக் கட்டணம்</u>**

நகராட்சி சட்டத்தில் இவ்வகையில் வரும் தொழில்கள்மூலம் பெறப்படும் வருமானம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருடம் | தொழில் உரிமம் பெயர் | உரிமக் கட்டணம் |
|---|---|---|
| 2011 – 2012 | டி & ஒ<br>பி.எப்.ஏ | ரூ. 6,24,000<br>ரூ. 53,375 |
| 2012 – 2013 | டி &ஓ | ரூ. 6,48,000 |
| 2013–2014 | டி & ஓ | ரூ. 6,53,000 |
| 2014–2015 | டி & ஓ | ரூ. 6,57,000 |
| 2015–2016 | டி & ஓ | ரூ. 8,50,490 |
| 2016–2017 | டி & ஓ | ரூ. 9,10,320 |
| 2017–2018 | டி & ஓ | ரூ. 9,47,762 |
| 2018–2019 | டி & ஓ | ரூ. 9,27,428 |

**<u>சுடுகாடுகளும், இடுகொடுகளும்</u>**

இந்நகராட்சி எல்லைக்குள்கீழ்க்கண்ட இடங்களில் சுடுகாடுகளும், இடு காடுகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | இந்துக்கள் சுடுகாடு | வண்ணாரப் பேட்டை |
| 2. | இந்துக்கள் சுடுகாடு | முத்தாலம்மன் பேட்டை |
| 3. | இந்துக்கள் சுடுகாடு | காந்திபுரம் |
| 4. | கிறிஸ்துவர்கள் இடுகாடு | வண்ணாரப்பேட்டை |
| 5. | கிறிஸ்துவர்கள் இடுகாடு | சற்குருபள்ளி அருகில் |
| 6. | இஸ்லாமியர்கள் இடுகாடு | ஓட்டுப்பட்டரை ரோடு |

**<u>கண்காட்சிகள் விழாக்கள்</u>**

அறிவிக்கப்பட்ட பண்டிகை விழாக்கள் எதுவும் நடைபெறுவது இல்லை. பழக்கண்காட்சி மே 2018 மாத இறுதியில் சிறப்பாக நடந்தது.

**<u>வசிப்பிடம் மற்றும் சுற்றுச் சூழல் மேம்பாடு</u>**

வீடுகளுக்கு புகைபோக்கி, கழிவு நீர் ஓடை இதர சுகாதார வசதிகள்செய்யுமாறு வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

31–03–2018ம் தேதியன்று நகரத்தில் மொத்தம் 12772 குடியிருப்புகள் இருந்தது. அறிக்கயாண்டில் 31-03–2012 அன்று 12,772 குடியிருப்புகள் இருக்கிறது.

**புதைச் சாக்கடைகள்**

இந்நகரில் புதைச் சாக்கடை திட்டம் நடைமுறையில் இல்லை. நகரின் தெருக்களில் உள்ள சாக்கடைகள்பொது சுகாதாரப் பிரிவில் உள்ள பணியாளர்களால் துப்புரவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**தீ பாதுகாப்பு**

இப்பணிக்காக தமிழ்நாடு அரசின் தீயணைப்புத் துறை பிரிவு குன்னூரில் இயங்கி வருகிறது. ஆகையால் இந்நகராட்சி அதற்கு சொந்தமான தீயணைப்பு பிரிவு வைக்கவில்லை.

**வெறி நாய்க்கடி நோய்கள்**

இவ்வாண்டு வெறி நாய்கடி நோய்களால் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள்ஒருவரும் இல்லை. வெறி பிடித்த நாய்களால் கடிக்கப்பட்டுள்ளவர்கள் குன்னூர் பாஸ்டியர் இன்ஸ்டிட்யூட்டில் லாலி மருத்துவமனை, ஒட்டுப்பட்டரை, OPHC சிகிக்சை அளிக்கப்பட்டுள்ளது.

விலங்கு நல வாரியம் மற்றும் IPAN உதவியுடன் இந்நகராட்சியில் சுற்றித்திரியும் தெருநாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் 645 நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டது.

**துப்புரவு பணியாளர்கள்**

சாக்கடை சுத்தம் செய்பவர்களை சேர்த்து இந்நகராட்சியில் மொத்தம் உள்ள துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 81 அவர்களுக்கு வேலைக்கு வேண்டிய சாதணங்கள்வழங்கப்பட்டது.

அரசினால் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் தவிர அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ள சீருடைகள்மற்றும் எல்லா சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் சீருடை வழங்கப்பட்டதற்கான செலவினம் ரூ.2,53,660/= அவர்களுக்கென்று 30 நகராட்சி குடியிருப்புகள்உள்ளது.

## தீண்டாமை ஒழிப்பு

பல்வேறு இனம், மாதம் சார்ந்த பலதரப்பட்ட தொழில் செய்யும் மக்கள்சமுதாய, மத நல்லிணக்கத்துடன் வாழ்வதால் இவ்வகையிலான குற்றச்சாட்டுகள்எதுவுமில்லை.

## நிதி நிலைமை

அத்தியாவசிய செலவினங்களின் உயர்வினாலும், நிர்வாக மற்றும் சுகாதார வசதிகள்மேம்படுத்த ஆகும் செலவுகள்அதிகரித்துள்ளதாலும், வருவாயில் செலவு போக மீதம் இல்லாதபடி நகராட்சியின நிதி நிலைமை இருப்பதால் அதிகச் செலவினங்கள்கொண்ட பெரியதோர் அபிவிருத்தித் திட்டங்கள்நகராட்சி நிதியில் இருந்து செய்லபடுத்துவதற்கு முடியாத நிலை உள்ளது. இருப்பினும் அரசாங்கத்தால் பல்வேறு திட்டங்களின் கீழ் அளிக்கப்படும் மான்யம் மற்றும் கடனுதவியைக் கொண்டு அபிவிருத்தித் திட்டப் பணிகள்மேற்கொள்ளப்பட்டன.

## சந்தைகள்

தினசரி சந்தை, வாகன நிறுத்துமிடங்கள், கட்டணக் கழிப்பிடங்கள்பேருந்து நிலையம், ஆடு, மாடு வெட்டும் இடங்கள்ஆகியவற்றில் குத்தகை மூலமாக பெறப்பட்ட வருமானம்.

| ஆண்டு | தினசரி சந்தை | வாகன நிறுத்துமிடம் | பேருந்து நிலையம் | ஆடு, மாடு வெட்டுமிடம் | நவீன கழிப்பிடம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பேருந்து நிலையம் | சந்தை கழிப்பிடம் |
| **2016–17** | 1,16,99,660 | 8,48,190 | 1,06,050 | 9,87,840 | 4,71,240 | 6,13,200 |
| **2017–18** | 1,16,99,660 | 18,48,600 | 1,11,353 | 92,000 | 4,94,802 | 6,43,860 |
| **2018–19** | 1,93,95,000 | 19,33,680 | 1,17,500 | 96,600 | 5,85,999 | 7,16,000 |

## சந்தைப்பேட்டை

தினசரி சந்தை தொடர்ந்து நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன் பரப்பளவு **3.16–12/16** ஏக்கர். இதில் உள்ள மொத்த நிரந்தர கடைகளின் எண்ணிக்கை **884** அறிக்கையாண்டில் புதிதாக ஏதும் கட்டப்படவில்லை.

சந்தைக்குள் விற்பனைக்கு கொண்டு வரப்படும் பொருட்களுக்கு கேட்டுகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமை பொது ஏலத்தில் விடப்பட்டது. அதற்கான ஏலத் தொகை ரூ.**5,69,000/-** நிரந்தர கடைகளில் மற்றும் நிரந்தர திறந்த வெளிக் கடைகளில் தினசரிக் கட்டணம் வசூலித்தல் நகராட்சியினராலேயே கவனிக்கப்பட்டு வந்தது.

சந்தை கடைகள் வாயிலாக கிடைத்த வருமானத்தை அதற்காக செலவழிக்கப்பட்டது போக மீதமுள்ள தொகை பொதுக் கணக்கில் மற்ற செலவினங்களை கவனிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>வாகன நிறுத்துமிடங்கள்</u>**

1. ஏற்கனவே இருந்த வண்டிகள்நிறுத்துமிடங்கள்இவ்வாண்டும் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்தது.

2. இவ்வாண்டிற்கு வண்டிகள்நிற்கும் நிலையத்தில் கட்டணம் வசூலிக்க செய்யும் உரிமை பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டது. இதன் மூலம் இவ்வாண்டு ரூ.19,33,680/– வருவாயாக பெறப்பட்டு வருவாய் பொதுக் கணக்கில் கீழ் உள்ள இதர இனங்களுக்கு பயன்படுத்தப்பட்டது.

**<u>பேருந்து நிலையத்திலுள்ள தங்கும் விடுதி கட்டிடம்</u>**

குளிக்கும் அறைகள்சகல வசதிகளும் கொண்ட தங்கும் விடுதிகள், சிற்றுண்டி விடுதி ஆகியவற்றின் மூலம் குத்தகை தொகையாக 2018–2019ம் ஆண்டில் ரூ.2,61,070/=ம் பெறப்பட்டுள்ளது. கட்டிட உறுதித் தன்மை சான்று பெற்று தொடர்ந்து நடத்துவதற்கு தற்காலிகமாக பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது.

**<u>தொழிற்சாலைகள்</u>**

அறிக்கையாண்டில் நகரில் 12 தொழிற்சாலைகள்உள்ளன. தொழிற்சாலைகள் சுகாதார ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டது.

**<u>மரம் வளர்ப்பு</u>**

ரேலியா, பந்துமி நீர்த்தேக்கங்களை சார்ந்த 514.23 ஏக்கர் நிலங்களில் வாட்டில், கற்பூரம், காட்டு மரங்கள்முதலியன உள்ளன.

**<u>பூங்காக்கள்</u>**

இந்நகராட்சியால் கீழ்க்கண்ட 3 பூங்காக்கள்பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. காமராஜபும்.
2. ரேலியாவில் உள்ள பூந்தோட்டம்.
3. கிரேஸ் ஹில் பூங்கா.

கீழ்க்கண்ட நகராட்சிப் பூங்காக்களை தனியார் நிறுவனத்தினர் பராமரிக்கின்றனர்.

1. டார்லிங்டன் பூங்கா – ஜனதா ஏஜென்சி.
2. மோர்ஸ்கார்டன் – ரோட்டரி சங்கம்.
3. சோமார்சேட் பூங்கா – வெரைட்டிஹால் ஏஜென்சிஸ்
4. ஹாட்டன்ஸ் பூங்கா – அரிமா சங்கம்

## நிலம் மேம்படுத்துதல்

இந்நகராட்சியில் அறிக்கை ஆண்டில் நகரமைப்பு அலுவலர் திரு. பி. மதியழகன், நகரமைப்பு அலுவலர் அறிக்கை ஆண்டு முழுவதும் நகரமைப்பு அலுவலராக பணியாற்றி உள்ளார், கட்டிட விண்ணப்பங்கள், ஆக்கிரமிப்புகள், நில ஆர்ஜிதம் முதலியன பணிகளை கவனிப்பது இப்பிரிவில் நடவடிக்கை ஆகும். அறிக்கை ஆண்டில் ஒரு நகரமைப்பு ஆய்வாளர் பணியிடமும், ஒரு சங்கிலியாளர் பணியிடமும் நிரப்படாமல் காலியாகவே இருந்தது. இப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள்விபரம் பின்வருமாறு.

1. நகரமைப்பு அலுவலர் (கிரேடு –1) – 1
2. இளநிலை உதவியாளர் – 2
3. நகரமைப்பு ஆய்வாளர்கள் – 2
4. சங்கிலியாளர்கள் – 2
5. ஏவலர் – 1

## விரிவான நகரமைப்பு திட்டங்கள்

நகரமைப்புச் சட்டம் 12ன் படி இந்நகராட்சியில் 9 நகரமைப்பு திட்டங்கள்விளம்பரப்படுத்தப்பட்டு நகரமைப்பு விதி 50ஏ பிரகாரம் முறையே பதிவு செய்யப்பட்டு அரசின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அரசு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏழு நகரமைப்பு திட்டங்கள், அரசாணைக்கு கீழே குறிக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்கள் | அங்கீகரிக்கப்பட்ட அரசாணைகள் |
|---|---|---|
| 1 | அட்டடி நகரமைப்புத் திட்டம் | அரசாணை எண்.369 நாள்01–03–1972 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை. |
| 2 | இராஜாஜி நகர் நகரமைப்புத் திட்டம் | அரசாணை எண். நாள்20–04–1972 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை. |
| 3 | கிரேஸ்ஹில் நகரமைப்புத் திட்டம் | அரசாணை எண்.1637நாள்14–08–1972 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை. |
| 4 | கிருஷ்ணாபுரம் நகரமைப்பு திட்டம் | அரசாணை எண்.78 நாள்06–01–1974 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை. |
| 5 | மவுண்ட்பிளசன்ட் நகரமைப்புத் திட்டம் | அரசாணை எண்.69 நாள்16–10–1984 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை. |
| 6 | ஆப்பிள்பீ நகரமைப்புத் திட்டம் | அரசாணை எண்.2588 நாள்22–10–1981 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை. |
| 7 | வண்ணாரப்பேட்டை நகரமைப்புத் திட்டம் | அரசாணை எண். 1432 நாள்07–01–1981 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை. |

உத்தேசிக்கப்பட்ட திட்ட பாதைகளை ஆப்பிள் பீ நகரமைப்புத் திட்டம், அட்டடி நகரமைப்புத் திட்டம், வண்ணாரப்பேட்டை, நகரமைப்புத் திட்டம், கிரேஸ்ஹில் நகரமைப்புத் திட்டம், கிருஷ்ணாபுரம் நகரமைப்புத் திட்டம் மற்றும் மவுண்ட்பிளசன்ட் நகரமைப்புத் திட்டம் பாதை அமைப்பு மற்றும் விஸ்தரிப்புக்காக எல்லா விவரங்களுடன் வருவாய் துறையினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்களுடன் முக்கியமாக பாதை விஸ்தரிப்புக்காக நகராட்சி நிதி நிலைமையை அனுசரித்து ஒவ்வொன்றாக வேலைக்கு மேற்கொள்ளப்பட்டும் ஒட்டுப்பட்டரை நகரமைப்புத் திட்டம் தமிழ்நாடு நாளிதழ் அரசிதழ் நாள்26–06–1980ல் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் தினத்தந்தி நாளிதழில் 07–05–1980ல் பிரசுரிக்கப்பட்டது. ஆழ்வார்பேட்டை வரைவு நகரமைப்புத் திட்டம் கிடைக்கப் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

குன்னூார் உள்ளூர் திட்டப் பகுதியில் முழுமைத் திட்டத்திற்கு தமிழக அரசின் ஆணை (வால்யூம்) எண்.168, நாள்13–07–2006 மூலம் அரசின் இணக்கம் பெறப்பட்டுள்ளது. குன்னூார் முழுமைத் திட்டம் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 28ன் கீழ் அரசு அங்கீகாரத்தை பிரிவு 30 (1)ன் கீழ் நடைமுறைப்படுத்த தமிழ்நாடு அரச சிறப்பிதழில் எண்.30 நாள்02–08–2006ல் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி நகரின் முழுமை திட்டத்தின் விதி 15ன்படி மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. தற்போது ஐந்து ஆண்டுகள்ஆனதால் புதிதாக தயார் செய்து நகரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 28ன் கீழ் முழுமைத் திட்டத் துணை இயக்குநர், கோவை அவர்களால் தயாரித்து அரசினரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட உள்ளது.

## <u>இதர பயன்களும் தொழில்களும்</u>

நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தின் சந்தைக்கு வெளியே உள்ள கடைகள்டோபிகானாக்கள் முதலியவற்றை வாடகைக்கு விட்டு வருமானம் பெறப்பட்டுள்ளது.

## <u>நகராட்சி குடியிருப்பு வீடுகள்</u>

| | | |
|---|---|---|
| 1. | மாடல் ஹவுஸ் | 40 |
| 2. | இராஜாஜிநகர் | 12 |
| 3. | டோபிகானா | 43 |

| | | |
|---|---|---|
| 4. | டென்ட்ஹில் (எல்.ஐ.ஜி) | 52 |
| 5. | மவுண்ட்பிளசண்ட் (எல்.ஐ.ஜி) | 28 |
| 6. | ஓட்டுப்பட்டரை (எல்.ஐ.ஜி) | 2 |
| 7. | இராஜாஜி நகர் (எல்.ஐ.ஜி) | 10 |
| 8. | ஸ்டாப் குவார்ட்டர்ஸ் | 15 |
| 9. | சுகாதாரப் பணியாளர்கள்குடியிருப்பு | 63 |
| 10. | இதர குடியிருப்புகள் | 6 |
| | **மொத்தம்** | **261** |

இதைத் தவிர நகராட்சிக்கு சொந்தமாக நகரின் பல்வேறு பகுதிகளில் 168 வெளிபுற சந்தையில் 168 கடைகளும், உட்புற சந்தையில் 723 இதன் வாடகைகளும் உள்ளன. இதன் ஆண்டு வருமானம் ரூ.1,61,72,851/- மற்றும் நகராட்சி குத்தகையினங்களின் மூலம் ஆண்டு வருமானம் ரூ.40,09,499/- ஆகும். எனவே, நகராட்சி கடைகள், நகராட்சி குடியிருப்புகள் மற்றும் மூன்றாண்டு குத்தகையினங்களின் மூலம் 2018/2019ம் ஆண்டின் மொத்த வருமானம் ரூ.27,50,554/- ஆகும்.

**<u>ஆக்கிரமிப்புகள்</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், உதகை அவர்களின் உத்திரவின் பேரில் நகரில் அனைத்து ஆக்கிரமிப்புகளும் அறிக்கை ஆண்டில் 2018–2019ல் .. ஆக்கிரமிப்புக்கள் அப்புறப்படுத்தப்பட்டது.

**<u>கட்டிட விண்ணப்பங்கள் 2018-2019</u>**

| | | |
|---|---|---|
| 2016ம் ஆண்டு ஆரம்பத்தில் நிலுவையில் இருந்தது | – | இல்லை |
| 2017–2018ம் ஆண்டு அறிக்கையாண்டில் வரப்பெற்றவை | – | 70 |
| உரிமம் அளிக்கப்பட்டவை | – | 29 |
| மறுக்கப்பட்டவை மற்றும் திருப்பப்பட்டவை | – | 37 |
| கட்டிடக் கலை (ம) அழகுணர்வு காப்புக் கூறுகள் | | |
| குழுமத்திற்கு அனுப்பப்பட்டவை | – | – |
| ஆண்டு முடிவில் நிலுவையாக உள்ளவை | – | – |

**<u>கட்டிட விண்ணப்பங்கள்</u>**

நீலகிரி மாவட்டத்தில் அரசினர் தனது 02–06–1992ம் தேதிய நேர்முக கடிதம் எண்.24059/92–95ல் கட்டிடங்கள்தடை விதித்து உத்தரவு பிறப்பித்ததும் இந்த உத்தரவின் படி நகராட்சி ஆணையரால் கட்டிடம் கட்ட உரிமம் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் நாள் 09–12–1992ல் அரசினால் அமைக்கப்பட்டு

கட்டிடக் கலை மற்றும் எழில் நோக்கு குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டு அதன்படி கட்டிட விண்ணப்பங்கள்பரிசீலனைக்கு மேற்படி குழுவிற்கு வந்தது. தற்போது 27–04–1999 அரசிதழ் கண்டுள்ள திருத்தப்பட்ட தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 217 சி,டி–ன் குடியிருப்புக் கட்டிடங்களுக்கு நிர்வாக அதிகாரியால் கட்டிட உரிமம் வழங்க கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

150 சதுர மீட்டர் கொண்ட குடியிருப்புக் கட்டிடங்களுக்கு நிர்வாக அதிகாரியால் கட்டிட உரிமம் வழங்கலாம். அதன்படி வழங்கப்பட்டு வரப்படுகிறது. அறிக்கையாண்டில் கட்டிட விண்ணப்பங்கள்எதுவும் நிலுவையில் இல்லை.

| | | |
|---|---|---|
| 1. | பொதுக் காரியங்களுக்கு | 6% |
| 2. | தண்ணீர் சாக்கடை இனங்களுக்கு | 3% |
| 3. | சுத்திகரிப்பு வரி | 1–5/6% |
| 4. | ஆரம்ப கல்வி வரி | 2% |
| 5. | விளக்கு வரி | 1–11/12% |

காலி நிலங்களில் மூலதன மதிப்பின் பேரில் அரையாண்டு ஒன்றுக்கு கீழ்க்கண்ட இனங்கள்கொண்ட மொத்தமாக 11.16 சதவீதம் சொத்துவரி தொடர்ந்து விதிக்கப்பட்டு வந்தது. பொது வரியில் ரூபாய்க்கு 0.10 பைசா வீதம் சொத்துவரி மற்றும் காலியிட வரிக்கு நூலக வரியாக வசூலிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பொதுக் காரியங்களுக்கு | 59.23% |
| 2. | தண்ணீர் சாக்கடை இனங்களுக்கு | 18.00% |
| 3. | ஆரம்ப கல்வி வரி | 15.00% |
| 4. | நூலகவரி | 7.77% |
| | **மொத்தம்** | **100%** |

வருவாய் நிதி கல்வி மற்றும் குடிநீர் கணக்கையும் சேர்த்து மொத்த வருவாய் ரூ.1146.60 லட்சமாக உள்ளது. மொத்த செலவு ரூ.1187.42 லட்சமாக உள்ளது. வருவாய் நிதியில் ரூ. 40.82 பற்றாக்குறையாக உள்ளது. அறிக்கையாண்டில் ரூ.27.30 லட்சம் நூலகவரி வசூலிக்கப்பட்டது.

**வரி வசூல் பணிகள்**

இவ்வாண்டில் வசூலிக்கப்பட்ட சொத்துவரி பார்க்கும் போது வரிவிதிப்பு ஒன்றுக்கு சராசரி ரூ.4105/— உள்ளது. இவ்வாண்டில் புதியதாக வரி விதிக்கப்பட்ட கட்டிடங்கள் 178 எண்ணிக்கைகள் ஆகும்.

**கேட்பு வசூல் நிலுவை**

இவ்வாண்டில் விதிக்கப்பட்டிருந்த வரி இனங்கள்வரியில்லாத இனங்கள்கேட்பு தொகைகளின் மொத்த ரூ.1530.82 லட்சம். இத்தொகையில் ரூ.850.46 லட்சம் வசூலிக்கப்பட்டது. மேலும், நிலுவை கேட்பில் ரூ.136.07 லட்சம் வசூலிக்கப்பட்டது. வசூலில் பாக்கி நின்ற தொகை ரூ.680.36 லட்சம். இத்தொகையில் ரூ.499.19 லட்சம் வரி இனங்களை சேர்ந்ததாகும். வரியில்லா இனம் ரூ.181.17 லட்சம். மேற்படி 2018—2019ல் சொத்துவரி, தொழில்வரி, வரியில்லா இனங்களின் வசூல் 55.56% சதவீதம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**வரி வசூல்**

| 2018—2019 | மொத்த கேட்பு | மொத்த வசூல் | மொத்த நிலுவை |
|---|---|---|---|
| வரியினம் | 1210.87 | 711.69 | 499.19 |
| வரியில்லா இனம் | 319.95 | 138.77 | 181.17 |

கடந்த மூன்று ஆண்டுகளிலும் இவ்வாண்டிலும் வரி மற்றும் வரியில்லா இனங்களில் வரிவசூல் சதவீதம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| | | 2016—2017 | 2017—2018 | 2018—2019 |
|---|---|---|---|---|
| வரியினம் | | 86 % | 62% | 56 % |
| வரியில்லா இனம் | | 80 % | 79 % | 43 % |
| மொத்தம் | | 96 % | 71 % | 55.56 % |

இந்நகராட்சியில் 01—04—2018 முதல் பொது சொத்துவரி திருத்தம் செய்யப்பட்டது. பொது சொத்துவரி திருத்தத்தின் மூலம் ஆண்டிற்கு ரூ.193.30 லட்சம் உயர்வு செய்யப்பட்டது.

**பொது நிதி நிலைமை**

01—04—2000 முதல் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட கணக்குப் படி வருவாய் கணக்கு, குடிநீர் கணக்கு மற்றும் ஆரம்ப கல்வி ஆகியவற்றின் மொத்த வருவாய் மற்றும் மொத்த செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | வரவு இலட்சத்தில் | செலவு இலட்சத்தில் | மீதி இருப்பு இலட்சத்தில் |
|---|---|---|---|
| வருவாய் நிதிக் கணக்கு | 1372.15 | 1639.40 | 267.25 (பற்றாக்குறை) |
| குடிநீர் | 142.54 | 257.32 | 114.78 (பற்றாக் குறை) |
| ஆரம்ப கல்வி | 101.45 | 15.74 | 85.71 (உபரி) |
| **மொத்தம்** | **1616.14** | **1912.46** | **296.32 (பற்றாக் குறை)** |

இவ்வாண்டு கையாளப்பட்ட வரி வகைகள் சென்ற ஆண்டில் விதிக்கப்பட்டிருந்த வரி வகைகள் இவ்வாண்டும் தொடர்ந்து விதிக்கப்பட்டது. இவ்வாண்டில் மேற்கண்டவைகளைத் தவிர புதியதாக மிகை வருமான வரி வகைகள் இல்லை.

அறிக்கையாண்டில் பொது நிதிக் கணக்கிலிருந்த உதவித் தொகைள் இதர தலைப்புக் கணக்குகளுக்கு கொடுக்கப்படவில்லை. பொது நிதிக் கணக்கில் உபரி நிதிக் கையிருப்பு இல்லாமையினால் உதவித் தொகை வழங்க இயலவில்லை.

மேற்கண்ட கணக்கில் போதிய வருவாய்கள்இல்லாமையாலும், தவிர்க்க முடியாத செலவினங்களினால் பற்றாக்குறையை தவிர்க்க முடியவில்லை.

**<u>இயல்பான வருவாய்</u>**

1. இவ்வாண்டில் பொது கணக்கில் கணக்குகளின் கீழ் மொத்த வரவு ரூ.1183.10 இலட்சம் ஆகும். கணக்கில் செலவு ரூ.1255.21 லட்சம் ஆகும்.
2. கீழ்க்கண்ட அரசு மானியங்கள்அறிக்கையாண்டில் பெறப்பட்டது.

**<u>கடன்கள்</u>**

அரசாணை எண்.120 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 10–07–1998ல் அனைத்து கடன் மற்றும் வட்டி நிலுவைகள்ஒருங்கிணைத்து ஒரே கடனாக பாவித்து 20 ஆண்டுகளில் 40 தவணைகளில் வசூலிக்க உத்திரவிடப்பட்டது.

இதன்படி ஆண்டு துவக்கத்தில் அரசு கடன் ரூ.151.44 லட்சமாகவும் அசலும் வட்டியும் ஆகும். அறிக்கை ஆண்டில் கடன் தொகை ஏதும் செலுத்தப்படவில்லை. ஆண்டு முடிவில் பாக்கிக் கடன் தொகை ரூ.151.44 லட்சமும் இருந்தது.

**<u>முதலீடுகள்</u>**

ஏற்கனவே உபரி நிதியிலிருந்து முதலீடு செய்த வகையிலும் பெறப்பட்ட தொகையை முதலீடு செய்த வகையிலும் மின்சார வாரியத்திற்கு செலுத்திய காப்புத்

தொகை வகையிலும், இயற்கை இடர்பாடுகள் நிதியும் சேர்த்து அறிக்கையாண்டு முடிவில் 31–03–2012 அன்று ரூ. 53,00,000/– முதலீட்டுக் கணக்கில் உள்ளது.

**<u>தணிக்கை</u>**

2017–2018ம் ஆண்டின் தணிக்கை முடிவு பெற்றுள்ளது. தணிகை முடிவு நிறைவுள்ளதாக கருதலாம். கணக்கின் மீது தணிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாண்டின் தண்டம் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. தற்பொழுது 57 தணிக்கை தடைகள் நிலுவையாக உள்ளது.

சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலை வாய்ப்புத் திட்டம் 1997/1998 முதல் 2013/2014 வரை மத்திய மாநில அரசின் மூலம் செயல்பட்டது. தற்போது அத்திட்டம் முடிவடைந்து தற்போதுள்ள மத்திய அரசின் திட்டத்தின் மூலம் NULM திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தெருவோர வியாபாரிகளுக்கு பாதுகாப்பான வியாபாரம் மற்றும் வசதி வாய்ப்புடன் கூடிய சேவைகள் ஒரு புள்ளி விவரம் சேகரித்ததில், முதுண் தெருவோர வியாபாரிகள் தினந்தோறும் ரூ.40/- வரையும், வருமானம் ஈட்டுவதாக புள்ளி விவரம் தெரிவித்துள்ளது.

எனவே, டெல்லி உச்ச நீதிமன்றம் 1989ல் ஒரு வரையறை செய்து விதி 19(1)ன் கீழ் நடைபாதை, தெருக்கள் மற்றும் மக்கள் நடமாடும் பகுதிகளில் ஊர் விளைவிக்கும் வகையில் நிகழாத வண்ணம் தெருவோர மையம் அமைத்து கொடுக்க வேண்டும் என்ற உத்திரவு பிறப்பித்தது.

தெருவோர வியாபாரிகளுக்கதான கொள்கை விளக்கம் 2014இன் படி, தெருவேதார வியாபாரிகள் (Street Vendors) என்பவர் ஒரு நிரந்தரமான கட்டடிடப்பு கொண்ட இடம் அல்லாமல் பொது இடத்திலும், தெருவோரங்களிலும், நடைபாதைகளிலும், வண்டிகளில் நகர்ந்து கொண்டும் பொருட்கள் விற்பனை செய்பவர் அல்லது சேவை தொழில் செய்பவரே ஆவர். இதில் 115 பேர் தெருவோர வியாபாரிகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்,

இதன் முதல் கட்டமாக நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டது. (Town Vending Committee).

நகர அளவில் நகர விற்பனைக் குழு அமைத்தல் வேண்டும். தெருவோர வியாபாரிகள் ஒரு முறையாக இடத்தில் விற்பனை செய்வதற்கம் அவர்கள் பாதுகாப்பாக இருப்பதற்கும் கீழ்க்கண்ட உறுப்பினர்களை கொண்டு நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டது. அவை பின்வருமாறு-

| | | |
|---|---|---|
| ஆணையாளர் | – | தலைவர் |
| நகரப் பொறியாளர் | – | உறுப்பினர் |
| திட்ட முகவான்மை அலுவலர் | – | கன்வீனர் |
| நகரமைப்பு அலுவலர் | – | உறுப்பினர் |
| நகர காவல் அதிகாரி | – | உறுப்பினர் |
| தெருவோர வியாபாரிகள் சங்கத் தலைவர் பிரதிநிதி | – | உறுப்பினர் |
| இருப்பிட சங்க பிரதிநிதி | – | உறுப்பினர் |
| சமுதாயம் தழுவிய அமைப்பு பிரதிநிதி | – | உறுப்பினர் |
| தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதி | – | உறுப்பினர் |
| தொழில்குழு பிரதிநிதி (வழக்கறிஞர், மருத்துவர், நகரமைப்பாளர், கட்டிடக் கலை நிபுணர்) | – | உறுப்பினர் |
| வர்த்தக வணிக நிறுவன பிரதிநிதி மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் வங்கி பிரதிநிதி | – | உறுப்பினர் |
| ஒரு நகர முக்கியஸ்த பெண் பிரதிநிதி | – | உறுப்பினர் |

1. தெருவோர வியாபாரிகள் பதிவு செய்தல் மற்று.டம அடையாள அட்டை வழங்குதல் (Registration and Issue of Biometric Identity Cards of Street Vendors).

2. ஒவ்வொரு நகரத்திலும், நகர அத்தாட்சி பெற்ற அதிகாரிகள் தெருவோர வியாபாரிகளின் புள்ளி விவரங்களை பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கு குறியீட்டு எண். வழங்குதல் போன்ற பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

"Housing for All" அனைவருக்கும் வீடு திட்டம் இத்திட்டமானது மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டமானது ஏழை மற்றும் குறைந்த வருவாய் ஈட்டும் குடும்பங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசால் அனைவருக்கும் வீட்டு வசதி வழங்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் படி, நகராட்சி மூலம் பயனாளிகளுக்கு சர்வே செய்து அதனை குடிசை மாற்று வாரிய அலுவலகம், கோவை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டியது. குடிசை மாற்று வாரிய அலுவலகத்தின் மூலம் வீடு கட்டும் பயனாளிகளுக்கு ரூ.2.10 லட்சம் மான்யமும், ரூ.1.90 லட்சத்தை பயனாளிகளே சொந்த பொறுப்பேற்று வீட்டை முழுமையாக கட்டிக் கொள்வது ஆகும். இத்திட்டமானது தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

**<u>தகவல் மையம்</u>**

இந்நகராட்சி பற்றிய விவரங்கள் பொதுமக்கள் அறிய தகவல் மையம் ஒன்று 22–12–1997ம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், அரசு ஆணை (நிலை) எண்.58, நாள்16–01–1998 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பொது-2 துறை)யில் குறிப்பிட்ட அறிவுரைகளுக்கேற்ப பொது மக்களுக்கு பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் மற்றும் சொத்துவரி ஆணைகள் ஆகியன தாமதமின்றி தகவல் மையம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

நிர்வாகத்தை நல்ல முறையில் செயலாற்ற உதவி புரிந்த அலுவலர்களுக்கும், மனப்பூர்வமாக ஒத்துழைப்பு நல்கிய நகர மன்ற தலைவர், நகர் மன்றத் துணைத் தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, ஆணையாளருக்கு உதவிபுரிந்த பல துறை அலுவலர்களுக்கும், பொதுமக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**நகராட்சி அலுவலகம்,**
**குன்னூர் – 643 102.**

**ஆணையாளர் (பொ),**
**குன்னூர் நகராட்சி.**

**நாள் 14/10/2019.**

# குன்னூர் நகராட்சி

## 2012/2013ம் அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடுத் தொகை (ரூபாய் லட்சத்தில்) | பணிகள் முடிக்கப் பட்டவை | பணி மேற் கொண்டு உள்ளவை |
|---|---|---|---|---|
| ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி குழுமம் | | | | |
| 1. | அறிஞர் அண்ணா பள்ளி சாலையை மேம்பாடு செய்தல். | 11.00 | 1 | – |
| 2. | மாடல் அவுஸ் சாலையை மேம்பாடு செய்தல். | 11.00 | 1 | – |
| 3. | சகாயமாதா சாலையை மேம்படுத்துதல் | 14,00 | 1 | – |
| 4. | டைகர் ஹில் சாலையை மேம்படுத்துதல். | 28.00 | 1 | – |
| 5. | அப்பர் அட்டடி சாலையை மேம்படுத்துதல். | 20.00 | – | 1 |
| 6. | காலேஜ் சாலையை மேம்படுத்துதல். | 16.00 | 1 | – |
| 7. | முத்தாலம்மன் கோவில் க.எண்.119 முதல் 114பி வரை மழைநீர் வடிகால் அமைத்தல். | 23.50 | 1 | – |
| 8. | முத்தாலம்மன் கோவில் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 10.50 | 1 | – |
| 9. | அவுசிங் யூனிட் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 10.50 | 1 | – |
| 10. | விநாயகர் கோவில் தெரு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 10.60 | 1 | – |
| 11. | இராஜாஜி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 10.00 | 1 | – |
| 12. | பழைய ஆஸ்பத்திரி லைன் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 10.00 | 1 | – |
| 13. | பஜார் தெரு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 6.00 | 1 | – |
| 14. | ஓட்டுப்பட்டரை சாலை சிவானந்தா உணவகம் எதிர்புறம் மழைநீர் வடிகாலுடன் கூடிய நடைபாதை அமைத்தல். | 7.00 | 1 | – |
| 15. | சிலாட்டர் அவுஸ் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 12.00 | – | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| **மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்** | | | | |
| 1. | வார்டு எண்.23, உட்லேன்ட்ஸ் சாலை முதல் காலேஜ் சாலை வரை மழைநீர் வடிகாலுடன் கூடிய நடைபாதை அமைக்கும் பணி. | 5.00 | – | 1 |
| 2. | வார்டு எண்.3, அப்பர் அட்டடி நகராட்சி பள்ளி அருகில் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல். | 6.50 | – | 1 |
| 3. | வார்டு எண்.17, பஜார் தெரு பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய நடைபாதை அமைத்தல். | 6.00 | – | 1 |
| 4. | வார்டு எண்.28, ஒட்டுப்பட்டரை சாலை முதல் முத்தாலம்மன்பேட்டை வரை மழைநீர் வடிகாலுடன் கூடிய கான்கிரீட் நடைபாதை அமைத்தல். | 10.00 | – | 1 |
| 5. | வார்டு எண்.11, நகராட்சி பள்ளி அருகில் மழைநீர் வடிகாலுடன் கூடிய நடைபாதை அமைத்தல். | 3.50 | 1 | – |
| 6. | வார்டு எண்.23, எம்.ஜி.ஆர். பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 6.50 | – | 1 |
| 7. | வார்டு எண்.15, பரசுராமன் தெரு பகுதியில் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல். | 7.30 | – | 1 |
| 8. | வார்டு எண்.6, மெயின் ஆள்வார்பேட்டை பகுதியில் மூடுதளத்துடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 22.00 | – | 1 |
| 9. | வார்டு எண்.20, தாலுக்கா அலுவலகம் குறுக்குப் பாதையில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தடுப்புச் சுவர் அமைத்தல். | 7.80 | – | 1 |
| 10. | வார்டு எண்.10, புனித மரியன்னை பள்ளி பின்புறம் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல். | 10.00 | – | 1 |
| **பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம்** | | | | |
| 1. | வார்டு எண்.29, காந்திபுரம் பகுதியில் தடுப்புச் சுவர் மற்றும் சிமென்ட் சாலை அமைத்தல். | 8.00 | – | 1 |
| 2. | வார்டு எண்.22, உமரிகாட்டேஜ் பகுதியில் மழைநீர் காந்திபுரம் பகுதியில் தடுப்புச் சுவர் மற்றும் சிமென்ட் சாலை அமைத்தல். | 2.00 | – | 1 |
| 3. | வார்டு எண்.16, குமரன் நகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 4.50 | – | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| **சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம்** | | | | |
| 1. | செம்மொழிநகர் ஆசீர் காம்பவுண்ட் பகுதியில் பேவர் பிளாக் பதித்தல் பணி | 5.00 | 1 | – |
| 2. | கார் நிறுத்துமிடம் கட்டுதல் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகம் வார்டு எண்.18 | 5.00 | 1 | – |
| 3. | சந்திரா காலனி பகுதியில் ரேசன் கடை கட்டுதல். | 7.00 | 1 | – |
| 4. | புரூக்லேண்ட்ஸ் கிணறு சாலை மேம்படுத்துதல் | 3.65 | 1 | – |
| 5. | காபி டே பின்புறம் பேவர் பிளாக் அமைத்தல். | 10.00 | – | 1 |
| **தன்னிறைவுத் திட்டம்** | | | | |
| 1. | புருக்லேண்ட்ஸ் அங்கன்வாடி முதல் (SF No.A/28/23) எஸ்.வி.கேஸ் குடோன் நடைபாலம் வரை மழைநீர் வடிகால் அமைத்தல். | 16.25 | 1 | – |
| 2. | புருக்லேண்ட்ஸ் அங்கன்வாடி முதல் (SF No.A/28/23) எஸ்.வி.கேஸ் குடோன் நடைபாலம் வரை மழைநீர் வடிகால் அமைத்தல். | 7.87 | 1 | – |
| 3. | ஓட்டுப்பட்டரை சாலையில் உள்ள தபால் அலுவலகம் சந்திப்பு முதல் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் வரை உள்ள சாலையை பேவர் பிளாக் சாலையாக மேம்படுத்துதல் | 1.50 | 1 | – |
| 4. | ஓட்டுப்பட்டரை சாலையில் உள்ள காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம் அருகில் பேவர் பிளாக் சாலையை மேம்படுத்துதல். | 1.50 | 1 | – |
| 5. | ஓட்டுப்பட்டரை மூன்று ரோடு முதல் கரடிப்பள்ளம் சாலையில் உள்ள (முதல் பகுதியில்) வரை தடுப்புச் சுவர் கட்டுதல். | 2.25 | 1 | – |
| 6. | ஓட்டுப்பட்டரை மூன்று ரோடு முதல் கரடிப்பள்ளம் சாலையில் உள்ள (இரண்டாவது பகுதியில்) தடுப்புச் சுவர் கட்டுதல். | 1.20 | 1 | – |
| 7. | ஓட்டுப்பட்டரை மூன்று ரோடு முதல் கரடிப்பள்ளம் சாலையில் உள்ள (மூன்றாவது பகுதியில்) தடுப்புச் சுவர் கட்டுதல். | | 1 | – |
| 8. | சந்திரா காலனி பகுதியில் கான்கிரீட் சாலையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல். | 5.00 | 1 | – |
| 9. | வெள்ளாளபுரம் பகுதியில் தடுப்புச் சுவர் கட்டுதல். | 0.90 | – | 1 |

# குன்னூர் நகராட்சி

# 2018-2019ம் ஆண்டின்

# நிர்வாக அறிக்கை